# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 16.07.2025**

**அசல் வழக்கு எண். 167/2018**

**வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு தபசில் சொத்தில் எனது அனுபவத்தை யாரும் இடையூறு செய்யக்கூடாது என பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எந்த இடங்களை இடையூறு செய்யக்கூடாது என கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண்.131/17 மற்றும் 131/18 ஆகிய இடங்கள் பொறுத்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சர்வே எண்கள் 131/17 மற்றும் 131/18 ஆகிய இடங்கள் எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டுது என்றால் எனது தந்தை மேற்படி இடங்கள் பொறுத்து எனக்கு தானம் எழுதிக்கொடுத்தார். எனது தந்தைக்கு சர்வே எண்.131/17 மற்றும் 131/18 ல் உள்ள இடங்கள் எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்கும் வருவாய்த்துறை ஆவணங்கள் ஏதேனும் நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

2. என்னிடம் காட்டப்படும் வாசா.ஆ.7 ஆவணத்தில் எனது தந்தை சர்வே எண்.131/17 கொண்ட இடத்தை பொறுத்து மட்டும்தான் தானம் எழுதிக் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் சர்வே எண்கள்.131/17 மற்றும் 131/18 ல் உள்ள இடங்கள் எனது அனுபவத்தில்தான் உள்ளன. எனது தந்தைக்கு பாத்தியம் இல்லாத சொத்துக்களை எனக்கு தானமாக அளிக்க அவருக்கு உரிமை இல்லை என்றால் எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் மட்டுமே அவர் எனக்கு தானம் கொடுத்துள்ளார்.

3. சர்வே எண்.131/18 ல் உள்ள இடம் பொறுத்து எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.131/18 அரசுக்கு சொந்தமான புறம்போக்கு தெரு என்றாலும், அதனால்தான் சர்வே

எண்.131/18 க்கான எந்த ஆவணத்தையும் நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. 2018 ம் வருடம் பஞ்சாயத்துதலைவர், குருவிகுளம் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர்கள் சர்வே எண்.131/18 இடத்தில் நான் செய்த ஆக்கிரமிப்புகளை அகற்றினர் என்றால் மேற்படி சர்வே எண்ணில் என்னால் போட்டு வைக்கப்பட்டிருந்த விறகுகளை மட்டும் அகற்றினர் மேற்படி சர்வே எண்ணில் நான் போட்டிருந்த குடிசை தற்போதுவரை சர்வே எண்.131/18 ல்தான் உள்ளது.

4. சர்வே எண்.131/17 ல் வா.சா.ஆ.7 ஆவணத்தின்படி எனது தந்தை எழுதிக் கொடுக்கும்போது கட்டப்பட்டிருந்த வீடு மட்டும்தான் தற்போதுவரை உள்ளது என்றால் மேற்படி சர்வே எண்ணில் கீழ்பக்கம் என்னால் புதிதாக ஒரு வீடு கட்டப்பட்டது. எனது வீட்டிற்கு முன்னால் கிழமேல் தெரு உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் 4 ம் பிரதிவாதியான ரத்தினத்தின் புஞ்சை நிலம் எனது வீட்டிற்கு வடக்குபக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதியின் புஞ்சை நிலத்தில் வடக்கு பகுதியில் சுமார் 5 அடி உயரத்தில் கிழமேல் காம்பவுண்ட் சுவர் அவரது வடக்குபகுதி புஞ்சை நிலம் முழுமைக்கும் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு அருகில் உள்ள மேற்படி காம்பவுண்ட் சுவரில் 4 ம் பிரதிவாதி இரும்பு கேட் வைத்திருந்தார் என்றால் சரிதான். சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக மேற்படி இரும்பு கேட் 4 ம் பிரதிவாதியால் அமைக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இரும்பு கேட் சர்வே எண்.131/18 இடத்திற்கு எதிரில் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இரும்பு கேட்டிலிருந்து வடக்குபுறமாக சர்வே எண்.131/18 இடம் வழியாக எனது வீட்டிற்கு முன்பு உள்ள கிழமேல் தெருவிற்கு வந்து சேரலாம் என்றால் சரிதான். சர்வே எண்.131/18 இடம் எனக்கு பாத்தியப்பட்டது. வழக்கு தபசில் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்க எனது தந்தை எனக்கு அளித்த ஏற்பாடு ஆவணத்தை தவிர்த்து வேறு ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.131/18 இடம் அரசுக்கு

பாத்தியப்பட்ட புறம்போக்கு தெரு என்றாலும், அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், மேற்படி சர்வே எண்.131/18 ல் என்னால் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் ஆக்கிரமிப்புகளை 1 முதல் 3 பிரதிவாதிகள் அகற்றினார்கள் என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**4 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**